# Iyarkai Sarntha Pazhanthamilarin Vazhviyal

**Dr. K. Muthamil Selvi**
*Assistant Professor, Tamil Department*
*Sourashtra College, Madurai*

**Abstract**
*Ancient Tamil people organized their livelihood on the basis of the five landscapes, giving primary importance to the energies of the five elements. Sangam literature records that these people, who lived with the emotions of agam and puram and with ecological awareness, revered nature as divine. All aspects of life such as love, heroism, faith, play, charity, and worship are symbolically portrayed in the texts with nature's active forces as their core. The Sangam poets, who sought to proclaim this worldview to the world, also portrayed the love emotions of the hero and heroine, as well as the valor and generosity of kings, as narratives inseparably linked with nature. Taking this perspective as its field of study, the present article is framed.*

***Keywords:*** *Panjaputhangal, Inthinai, Agappuram, Venilkalam, Thatbaveppam, Oliserkai, Moolatharam, Suzhaliyal, Sutrupuram, Kaiyarunilai, Vazhviyalkoorukal, Kuriyeedu, Kodaithanmai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981626

**References**

1. Aringar S. V.Subiramaniyan-Sangailakiyam moolamumthelivuraiyum.
2. Prof Dr. Ramasamy-Thirukural.
3. Aringar S. V. Subramaniyan-Tholkappi am.
4. M.Varatharasanar-Thirukuralthelivurai.
5. Stephen krole-Soozhaliyaloruarimugam.

# இயற்கை சார்ந்த பழந்தமிழரின் வாழ்வியல்

***முனைவர் க.முத்தமிழ்ச் செல்வி***
தமிழ் உதவிப் பேராசிரியர்
சௌராஷ்டிரா கல்லூரி, மதுரை

***ஆய்வுச்சுருக்கம்***
*பழந்தமிழ் மக்கள் பஞ்சபூதங்களின் ஆற்றலை முதன்மையாக வைத்து ஐந்திணைகளின் அடிப்படையில் தங்கள் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொண்டனர். அகப்புறம்என்ற உணர்வுகளோடும் சூழலியல் சிந்தனையோடும் வாழ்ந்த அம்மக்கள் இயற்கையை தெய்வமாக மதித்தனர் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வாழ்வியல் கூறுகளான காதல் வீரம், நம்பிக்கை, விளையாட்டு, கையறுநிலை, வழிபாடு ஆகிய அனைத்தும் இயற்கை செயல் திறனை மையமாகக் கொண்டு நூல்களில் குறியீடுகளாக காட்டப்பட்டுள்ளன இதை உலகிற்கு பறைசாற்ற வந்த சங்கப் புலவர்களும் தலைவன்-தலைவியின் காதல் உணர்வுகளையும் மன்னர்களின் வீரம், கொடைத்தன்மையையும் இயற்கையோடு இணைந்த செய்திகளாகவே இலக்கியங்களில் பதிவு செய்து ள்ளனர் என்பதை ஆய்வுக்களமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *பஞ்சபூதங்கள், ஐந்திணை, அகப்புறம், வேனில்காலம், தட்பவெப்பம், ஒளிச் சேர்க்கை, மூலாதாரம், சூழலியல், சுற்றுப்புறம், கையறுநிலை, வாழ்வியல்கூறுகள், குறியீடு, கொடைத்தன்மை*

## முன்னுரை

**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயர கோன் உயரும்**
**கோன் உயர கோல் உயரும்"**

என்ற ஔவையாரின் கூற்றுப்படி விவசாயத்தை முன் நிறுத்தி இயற்கை சார்ந்த வாழ்வியலை சங்க இலக்கியம் கொண்டுள்ளது. அந்த வகையில் நிலம் நீர், செடி, கொடி, பறவை அந்தந்த நிலத்தில் வாழும் பிற உயிரினங்கள் அனைத்தும் மனிதனின் இயற்கையோடு இணைந்த வாழ்வியலை உருவாக்குகின்றன. சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியலை எடுத்துரைக்கும் நூல் மட்டுமல்ல. தமிழ் மக்களின் வாழ்வியலோடு கலந்து இருக்கும் பல்வேறுபட்ட இயற்கைத் தாவரங்களையும் உயிரினங்களையும் சித்தரிக்கும் நூலாக இருக்கின்றன. இயற்கையை மையமாகக் கொண்ட திணைக் கோட்பாட்டை அன்றே பழந்தமிழர்கள் உணர்ந்திருந்தனர். அதற்கேற்ப தங்கள் வாழ்க்கை முறைகளை சுற்றுப்புறச்சூழல் பாதிக்காத வண்ணம் அமைத்துக்கொண்டனர் என்பதை சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.அதனை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## இலக்கணம் கூறும் தாவரத்தின் இயல்பு

தாவரங்கள் எனும் போது தனது உணவை கதிரவனின் உதவியால் ஒளிச்சேர்க்கை நடத்தி தானே தயாரித்துக் கொள்கின்றன அதனால் தான் தாவரங்களை முதல் இலக்கண நூலாசிரியரான தொல்காப்பியர்,

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனோடு நாவே**
***(மரபியல் 571-572)***

என்று கூறுகிறார். இதில் ஓரறிவு உயிராக தாவரங்கள் இவ்வுலகத்தில் படைக்கப்பட்டுள்ளன அதாவது தாவரங்களுக்கு தட்பவெப்ப உணர்வை உணரும் தொடு உணர்வு உண்டு என்பதாலேயே ஓரறிவு உயிர் என்றார் தொல்காப்பியர். மேலும் நம்பியகப் பொருள் என்னும் இலக்கண நூலில்

மக்கள் தங்களின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்கு தாவரங்களைச் சார்ந்திருந்தனர் என்பது குறிப்பிடப்படுகிறது அது,

**புள்ளும் மாவும் புனரியும் கானலும்**
**உள்ளுறுத்து இயன்றவும் ஒழிந்தவை பிறவும்**
**தன்சொல் கேக்குந போலவும் தனக்க வை**
**இன்சொல் சொல்லுந போலவும் ஏவல்**
**செய்குந போலவும் தேற்றுந போலவும்**
**மெய்குழல் கிழத்தி மொழிந்தாங்கு அமையும்**
**(நம்பியகப் பொருள்- 223)**

என்ற சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது இதில் மக்கள் தனக்கொரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியை செடிகொடிகளுடன் சொல்லும் பொழுது அவைகளும் அது கேட்டு மகிழ்கின்றன என்றும் தனது துன்பத்தை, தாவரங்களிடம் கூறும் பொழுது அவைகளும் தன்னோடு சேர்த்து துயரப்படுகின்றன என்றும் நம்பினர் என்ற செய்தி நமக்கு கிடைக்கிறது.

## சங்க இலக்கியத்தில் இயற்கை

பழந்தமிழர்கள் இயற்கை அமைப்பிற்கு ஏற்ப தங்கள் வாழிடங்களை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்று பகுத்தும், இயற்கையின் நுட்பத்தை தெரிந்து கொண்டும் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்றவாறும் அவற்றின் மூலாதாரங்கள் பாதிக்காத வண்ணம் வாழ்ந்தனர். 2381 பாடல்களைக் கொண்ட சங்க இலக்கியத்தில் 1862 பாடல்கள் அகப்பாடல்கள் ஆகும். அதில் 20 பாடல்கள் மட்டுமே இயற்கையைப் பாடவில்லை.

உலகம் தோன்றிய உடன் முதன் முதலில் தோன்றிய தாவரங்களோடு இணைந்த இயற்கை வளத்துடன் பழந்தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்திருந்தனர். தொல்காப்பியப் பொருள் அதிகாரம் குறிப்பிடும் ஐந்து நிலப் பாகுபாடுகள் இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்டவை ஆகும். தாவரங்களை அதிக அளவில் பயிர் செய்து மனிதர்களின் உணவுப் பற்றாக்குறையை தீர்த்துக் கொண்டனர் என்பதை,

**ஒரு பிடி படியும் சீறிடம்**
**எழு களிறு புரக்கும் நாடு கிழவோயே"**
**(புறம் 40:10-11)**

என்ற புறப்பாடலில் ஒரு யானை படுக்கும் இடத்தில் இடப்பட்ட பயிரால் விளையும் உணவுப் பொருளை ஏழு யானைகளுக்கு வழங்கலாம் என்பதிலிருந்து சுருங்கிய சாகுபடி நிலத்தில் உயர்ந்த அளவு விளைச்சலைக் காண முடியும் என்ற குறிப்பு காணக் கிடைக்கிறது. உலகத்தில் பல்வேறு விளைச்சல் நிலங்களுக்கு ஏற்றபடி இயற்கை வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன. நிலங்களுக்கு ஏற்ற மண்வகைகளும் இறைவனால் வழங்கப்பட்டு தான் இருக்கின்றன ஆனால் அவை இன்று சுரண்டப்பட்டதால் (மண் வளங்களும், விளைச்சலும்) வறுமை மேலிடுகின்றது என்ற கருத்து பெறப்படுகிறது. தாவரங்கள் பூப்பதையும் விளைவதையும் அடிப்படையாகக் கொண்டு காலத்தையும் சங்க கால மக்கள் பிரித்துள்ளனர். அந்த வகையில் பண்டைத் தமிழர்கள் ஒரு வருடத்தை சூழல் நிலைப்பாட்டிற்கு ஏற்ற வகையில் ஆறாகப் பிரித்து பெயரிட்டுள்ளனர் என்பது,

1. இளவேனில் - சித்திரை வைகாசி (கொங்கு,மராவம் )
2. முது வேனில்- ஆணி ஆடி (மூங்கில், மல்லிகைப்பூ )
3. கார்காலம்- ஆவணி புரட்டாசி (முல்லைப் பூ, கொன்றைப்பூ)
4. குளிர்காலம்- ஐப்பசி, கார்த்திகை (முசுண்டை, பீர்க்கை )
5. முன் பனிக்காலம்- மார்கழி தை (கரும்பு, உளுந்து, மொச்சை )
6. பின் பனிக்காலம்- மாசி பங்குனி (கருங்குவளை மலர், செந்தாமரைப்பூ) என்பதலிருந்து அறிய முடிகிறது.

"வேனில் காலத்தில் வருவேன்" என கூறிப் பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் வராத நிலையில் தலைவி தன்னைச் சுற்றி உள்ள இயற்கை நிகழ்வுகளான தாவரங்கள் பூப்பதை வைத்து உணர்ந்து கொண்டாள் என்பதிலிருந்து அறிய முடிகிறது. முதுவேனில் காலத்தில் உயர்ந்த

மலைகளில் ஓங்கி வளர்ந்திருக்கும் மூங்கில்களை வைத்து அக்கால மக்கள் அப்பருவத்தை உணர்ந்து கொண்டனர். முல்லைப்பூ பூக்கும் காலமாக கார்காலம் சுட்டப்படுகின்றது. இதனை நெடுநல்வாடை, நெல்லும் மலரும் தூவி மக்கள் இல்லுறைத் தெய்வத்தை வணங்கினர்" என்று கூறுகிறது. குளிர்காலத்தில் முசுண்டை, பீர்க்கம்பூ மலர்ந்ததாக நெடுநல் வாடையும் மற்ற நூல்களும் பதிவு செய்கின்றன. குளம் ஏரிகளில் காணப்படும் நீர் தாவரங்களின் மூலமாக அக்கால நீர் வளத்தை ஆராயும் வாய்ப்பு மக்களுக்கு கிடைத்துள்ளது. ஆம்பல், நெய்தல், தாமரை, வள்ளை போன்ற மலர்கள் வெள்ளத்தின் உயர்வுக்கு ஏற்ப தன் தண்டை வளர்த்திருக்கும் என்பதை திருவள்ளுவரே,

**வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்தனையது உயர்வு"**

என்று கூறுவதில் இருந்து உணர முடிகிறது .

**மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடு உடையது அரண்**

என்னும் திருக்குறளுக்கு ஏற்ப நீரும், நிலமும், மலையும், காடும் சேர்ந்ததே மனித வாழ்க்கை கக்கு அரண் என்பதை அக்கால மக்கள் உணர்ந்திருந்தனர்.

## தாவரங்களோடு இணைந்த வாழ்க்கை

சங்க இலக்கியம் இயற்கையை ஓர் அழகியலாகப் புனைந்து வந்துள்ளதைப் பார்க்கும்போது அக்கால மக்கள் இயற்கையை பேணிக்காத்த விதமும் தாவரங்களை அழிந்து விடாமல் விழிப்புணர்வுடன் காத்தவிதமும் புலனாகிறது. இதனை நற்றிணை,

**"நும்மினும் சிறந்தன்று நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே"**
***(நற்றிணை-172)***

என்று கூறுவதில் சிறு வயதிலிருந்தே நெய்யும் பாலும் தந்து தன்னால் இனிது வளர்க்கப்பட்ட புன்னை மரம் என்று தன் தலைவனுடன் மகிழ்ந்திருக்க வெட்கப்பட்டு வேறு இடம் சென்றாள் தலைவி என்பதிலிருந்து தாவரங்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் மக்கள் இயற்கையை நுகர்ந்து வந்துள்ளனர் என்பது தெரிகிறது. மேலும்

***நீணிழல் தளிர் போல் நிறனுழ்த்தல்***
***அறிவேனும்.. (கலித்தொகை-20).***

என்னும் பாடலில் தலைவனை காணாது வருந்திய தலைவியின் தோலின் நிறமும் மாறி உள்ளது என்பதை இக்கருத்து வெளிப்படுத்துகிறது. முழுமையான ஒளியைப் பெற்றே தாவரங்கள் ஒளிச்சேர்க்கையினை நடத்தும். நிழலிலேயே வளரும் தாவரத்தில் அதன் பச்சையம் அழிந்து விடுகின்றது. அதனால் அதன் இலைகள் பச்சை நிறத்தை இழந்து விடும் என்பது அறிவியல். இதனையும் அக்கால மக்கள் தங்கள் வாழ்வியல் நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்தியிருந்தனர் என்பதை இச்செய்தி விளக்குகிறது.

அக்காலத்தில் பெருஞ்சாத்தன் என்ற வள்ளல் இறந்தபோது அவ்வள்ளலின் கொடைத் திறனால் மகிழ்ந்திருந்த புலவர்களில் ஒருவரான குடவாயில் கீர்த்தனார் என்னும் புலவர் அவன் வீட்டு வாசலில் பூத்திருந்த முல்லைக் கொடியைப் பார்த்து, வள்ளல் இறந்த இந்த துயர நிலையில் உன்னை யாருமே சூடமாட்டார்கள். ஆதலால் நீ ஏன் இப்பொழுது பூத்தாய் உன்னால் எப்பயனும் இல்லையே! என்கிறார். அது,

**இளையோர் சூடார் வளையூர் கொய்யார்**
**நல் யாழ் மருப்பின் மெல்ல வாங்கி**
**பாணன் சூடான் பாடினி அணியாள்**
**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**
**வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"**
***(புறநானூறு-242)***

என்னும் பாடலின் மூலம் விளங்குகிறது.

கடை எழு வள்ளல்களுள் ஒருவனான பாரி மன்னன் முல்லைக்கொடி ஒன்று பற்றுக்கோல் இன்றி தரையில் படர்ந்து இருப்பதைக் கண்டு அதன் நிலைக்கு இரங்கி தான் ஏறி வந்த தேரையே பற்றுக் கோலாக்கி முல்லைக் கொடியிடம் விட்டுச் சென்றான் என்பதை நினைக்கும் பொழுது பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையிடம் கொண்டிருந்த அன்பு புலனாகிறது. மேலும்

காதல் வயப்பட்ட ஒரு தலைவி, தலைவனைக் காணாமல் உறங்காமல் இருக்கின்றாள். அவள் உப்பங்களிகளில் வளர்கின்ற நீல வண்ணம் உடைய நெய்தல் மலர்கள் தூங்குவதைக் கண்டு தனக்கு, அந்த துயிலும் பேறு கிடைக்கவில்லையே என்று பொறாமை உணர்ச்சியுடன் தன்னை நொந்து கொள்கிறாள் அது,

**முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்**
**ஒரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல் எனக் கூவுவேன் கொல்..**

என்னும் ஔவையார் பாடலின் மூலம் மக்கள் இயற்கைப் பொருள்களுக்கு உயிரும் உணர்வும் கொடுத்து வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

## முடிவுரை

சங்க கால மக்கள் தாம் வாழ்ந்த சூழலியலை உற்று கண்காணித்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் தன்னைப் போலவே மரம் செடி, கொடி, பறவை, விலங்கு இன்ன பிற அனைத்தையும் நேசித்துள்ளனர் என்பதையும் இக்கட்டுரை தெரிவிக்கிறது.

இயற்கையை தங்களின் பண்பாட்டோடு இணைத்து வாழ்ந்த தமிழ் மக்கள் தங்களது தொழிலையும், புலன் நுகற்சியையும் அவை சார்ந்தே வாழ்ந்து வந்தனர் என்பதும் இக்கட்டுரையின் வழி பெறப்பட்ட முடிவாகும்.

## துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியம் மூலமும் தெளிவுரையும் -அறிஞர் ச.வே.சுப்பிரமணியன்.
2. திருக்குறள் - பேராசிரியர் டாக்டர் ராம சாமி
3. தொல்காப்பியம் - அறிஞர் ச.வே.சுப்பிரமணியன்.
4. திருக்குறள் தெளிவுரை - மு.வரதராசனார்.
5. சூழலியல் ஒரு அறிமுகம் - ஸ்டீபன் கிரோல்.